--

**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்</u>**.132/2019

பெயர்-திரு.கண்ணதாசன் நாள்.14.11.2025

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

அசல் வழக்கில் உள்ள சொத்து விவரம் பற்றி எனக்கு தெரியாது. வாதி எனக்கு நண்பர் ஆவார். வாதி எனக்கு 10 ஆண்டுகள் தெரியும், வாதி கேட்டுக்கொண்டதற்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. தாவா சொத்து எந்த தேதியில் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் தேதி, மாதம், நினைவில் இல்லை. சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும், கிரைய பத்திரத்தின் சங்கதிகளை படித்து பார்த்துதான் சாட்சி கையெப்பம் செய்தேன். தாவா சொத்து தற்போது வரை முருகேசன் அனுபவத்தில் உள்ளது. மேற்படி சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு விவரங்கள் சரியாக தெரியாததால் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் யார் உள்ளார்கள் என்று சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. சார்பதிவாளர் கிரையத்தின் பொழுது வாதி, பிரதிவாதிகளிடம் மறு பயன் செலுத்தப்பட்டுள்ளதா என கேட்டாரா என்றால் கேட்டார். இருவரின் சம்மதத்தின் பெயரில் தான் கிரையம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் சுவாதீனம் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் தெரியாமல் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.14 16:16:36 +0530

District Munsif